# Thirukurala Kuravanchi – திருக்குற்றால குறவஞ்சி

| | |
|---|---|
| நூல் | திருக்குற்றால குறவஞ்சி |
| ஆசிரியர் | திரிகூட ராசப்பக்கவிராயர் |
| சமயம் | சைவம் |

## நூற்குறிப்பு

- குறவஞ்சி என்பது ஒரு வகை நாடக இலக்கிய வடிவமாகும்.
- சிற்றிலக்கிய வகைகளின் ஒன்று.
- பாட்டுடைத் தலைவன் உலா வரக்கண்ட தலைவி, அத்தலைவன் மீது காதல் கொள்ள, குறவர் குலத்தை சேர்ந்த பெண்ணொருத்தி தலைவிக்கு குறிகூறப் பரிசில் பெறும் செய்திகளைக் கூறுவதால் குறவஞ்சி என்னும் பெயர் பெற்றது.
- மேலகரத்தில் பிறந்த திரிகூட ராசப்பக்கவிராயர் இதன் ஆசிரியர்
- “திருக்குற்றாலநாதர் கோவில் வித்துவான்” என்ற பட்டப்பெயர் பெற்றவர்.
- திருகூட ராசப்பக் கவிராயரின் “கவிதைக் கீரிடம்” என்று போற்றப்பட்டது.
- குறவஞ்சி நாடகம், குறத்தி பாட்டு என்ற பெயரும் உண்டு.
- முத்துவிஜயரங்க சொக்கநாத நாயக்கர் காலத்தில் குற்றாலநாதர் (சிவன்) .முன்பு அரங்கேற்றப்பட்டது
- இது அகநூலாக இருப்பினும் தலைவன் தலைவியின் பெயர்களைக் கூறுகிறது.
- “கடவுள்மாட்டு மானிடப் பெண்கள் நயந்த பக்கம் ” என்பதற்குச் சான்றாகத் திகழும் நூல்.
- கட்டினும் கழங்கினும் – என்பதன் அடிப்படையில் தோன்றியது.
- திரிகூடநாதர் பவனிவருதல் – வசந்தவல்லி பந்தாடுதல் – வசந்தவல்லி சிவனைக் கண்டு காதல் கொள்ளதல் – வசந்தவல்லியின் கால் துன்பம் – குறத்தி வருதல் (சிங்கி), மலைவளம் கூறுதல் – வசந்தவல்லிக்கு குறி சொல்லதல் – வசந்தவல்லியின் மகிழ்ச்சி – குறவன் குறத்தியைத் (சிங்கன்) தேடிவருதல்– இருவரும் சந்தித்தல் எனக் கதை செல்கிறது,


அனைத்து போட்டித் தேர்வுகளுக்குமான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

- முதல் குறவஞ்சி நூல்இயற்றமிழ் ., இசைத்தமிழ் இரண்டும் கலந்தது.
- பல வகைப் பாக்களும், பாவினங்களும் கலந்த நூல்
- இனிய ஓசை நயமும் சிறந்த கற்பனையும் உடைய நூல்

*மேற்கோள்*

| |
|---|
| “ஓடக் காண்பது பூம்புனல் வெள்ளம்<br>ஒடுங்கக் காண்பது யோகியர் உள்ளம்<br>வாடக் காண்பது மின்னார் மருங்கு<br>வருந்தக் காண்பது சூல்உளைச் சங்கு<br>போடக் காண்பது பூமியில் வித்து<br>புலம்பக் காண்பது கிண்கிணிக் கொத்து”<br>– எனக் குற்றாலத்தின் சிறப்புக் கூறப்படுகிறது. |
| “வானரங்கள் கனிகொடுத்த மந்தியொடு கொஞ்சம்<br>மந்திசிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்”<br>– எனக் குற்றால மலைவளம் கூறப்படுகிறது. |
| “செங்கையில் வண்டு கலின்கலின் என்று செயம்செயம் என்றாட<br>இடை சங்கதம் என்று சிலம்புபுலம்பொட தண்டை கலந்தாட”<br>– என வசந்தவல்லி பந்தாடிய சிறப்புக் கூறப்படுகிறது. |
| “அஞ்சுதலைக்குள் ஆறுதலை வைத்தார் எனது மனத்தின்<br>அஞ்சுதலுக்கு ஓர் ஆறுதலை வையார்” |


அனைத்து போட்டித் தேர்வுகளுக்குமான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

| |
|---|
| – எனச் சொல்லழகு கொண்டுள்ளது. |
| வானரங்கள் கனிகொடுத்து மந்தியொடு கொஞ்சும்<br>மந்திசிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்<br><br>– குற்றாலக் குறவஞ்சி |

- தமிழரசி குறவஞ்சி – வரதநஞ்சையப்ப பிள்ளை
- வேதநாயக சாஸ்திரி – பெத்தலகமே குறவஞ்சி

www.tnpscgroup